உ

சிவமயம்

கதிர்காம யாத்திரைப் பாராயணப் பிரபந்தத்தின்

அநுபந்தம்.

ஆக்கியோன் :

கச்சாய், திரு. சி, சின்னையா அவர்கள்.

பதிப்பித்தவர் :

நல்லூர், வழக்கறிஞர்,

திரு. சி. விஸ்வலிங்கம் அவர்கள்.

செல்வி,

பூ. நேசலட்சுமி அவர்களின்

திருமண நினைவுமலர்.

மன்மத ஆண்டு வைகாசி மீ 20-உ

3-6-55

சாவகச்சேரி,

இலங்காபிமானி அச்சியந்திரசாலை.

உ

சிவமயம்

வேல்முருகன் துணை

கதிர்காம யாத்திரைப் பாராயணப் பிரபந்தத்தின் அனுபந்தம்.

இஃது

யாழ்ப்பாணம், நல்லூர்,

திரு. சி. நாகலிங்கம் அவர்களின்

சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி

நேசலட்சுமி அவர்களின்

திருமண நினைவுச்சின்னமாக,

வழக்கறிஞர்,

திரு. சி. விஸ்வலிங்கம் அவர்களால்

அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது.

நல்லூர்,

மன்மத ஷூ வைகாசிமீ 20-உ

3-6-55.

காப்பு

நேரிசை வெண்பா

கந்தன் கதிரைநகர் காண்பார்க ளோதுபிர
பந்தத் தனுபந்தம் பாடமறை — முந்தும்
எழுத்தா னவனை யிதயத் திருத்தி
வழுத்த வருநன் மதி.

பதிப்பித்தவரின் பண்பு

கட்டளைக் கலித்துறை

வள்ளியர் பற்பலர் வாழ்ந்தவிந் நாட்டினில் வந்தவர்க்குக்
கிள்ளித் தரமன மில்லாத காலத்திற் கேடகல
அள்ளிக் கொடுத்திடு வார்விஸ்வ லிங்க மஹிதவரின்
தள்ளப் படாத குலப்பண்ப தாமென்று சாற்றுவதே.

மதிப்புரைகள்

1. பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர், சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

2. பண்டிதர் திரு. ம. முருகேசு, ஆசிரியர், சைவவித்தியாசாலை, கரம்பைக்குறிச்சி, வரணி,

3. திரு. நா. முத்தையா, பதிப்பாசிரியர், "ஆத்ம ஜோதி", நாவலப்பிட்டி.

(இவை மூன்றும் பிரபந்தத்தி லிடம்பெற்றுள்ளன.)

4. 29-8-54-ல் வெளிவந்த "ஈழகேசரியின்" மதிப்புரை :

"கதிர்காம யாத்திரீகர்களுக்கு இலவச விநியோகத்திற்காக இயற்றப்பெற்ற இந்நூல், ஆஸ்திகம் அருகி நாஸ்திகம் பெருகும் இந்நாட்களில் கல்வி, அறிவு, ஒழுக்கம், சமயபக்தி ஆதியன—குறிப்பாக இளைஞர்களிடையே—குன்றிவருவதையுணர்ந்து, நமது நாட்டுக்குப் பொருத்தமான பண்பாடுகளை ஆதரித்தும், பொருத்தமற்றவைகளைக் கண்டித்தும், இந்துசமூகம் இழந்த பண்பாட்டைத் திரும்பப் பெற்றுய்யுமாறும் முருகனை வேண்டிப் பாடிய பல வேறு சந்தப் பாக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பாக்கள் சொன்னயம் பொருணயங்களோடுகூடிச் சந்தவின்பமுள்ளனவாய்ப் பெரும் பழம் புலவர்களை நமது நினைவுக்குக் கொண்டுவருகின்றன. உதாரணமாக, அவையடக்கத்து முதற்பாடலை வாசிக்கும்போதே கந்தபுராணமருளிய கச்சியப்ப சிவாசாரியர் திருவாக்குப்போற் றென்படுகின்றது.

வேல் துதியில், ஐந்திடங்களில் வெவ்வேறு கருத்துக்களில் 'வேலை' யமைத்து, "வள்ளி கோன்கர வேலைநாம் வணங்குதல் வேலை" என்று வடிவாக முடித்திருப்பது வாசகர் மனத்தைவெகு வாய்க் கவரக்கூடியதாயிருக்கின்றது. இதுபோன்றன இன்னும் பலவுள. ஆக்கியோன் பகிரங்கப் பட்டமெதுவும் பெற்றிலாராயினும் பல பெரும் பக்தர்கள் புலவர்களோடு பயின்ற பண்பாடுடைய ரென்பது புலனாகின்றது.

இப்பிரபந்தத்தை யாத்திரீகர்களுக்கு இலவசமாக வழங்கும் பணிக்கு ஆக்கியோனை ஊக்கிப் பொருளுதவி புரிந்த ஆசிரிய அன்பர்களின் அரும்பணி பெரிதும் போற்றத்தக்கதொன்றாகும். கதிர்காமத்திற்கு யாத்திரை செய்வோர் மாத்திரமன்றிச் செய்ய விழைவோரும் இந்நூலைப் பெற்றுப் பாராயணஞ்செய்வது சாலவும் நன்று............."

5. 24-4-55-ல் கல்கியில் வெளியான மதிப்புரை:

" முத்தமிழில் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமானுடைய வழிபாடு, கடல்கடந்த பிரதேசங்களுக்கும் பரவிப் பல்லாண்டுகளாகச் செழித்து வந்திருக்கின்றது. கடல் கடந்து தொலை தூரத்தில், கனத்தகாரமான வனத்தரத்தில், கதிர்காம க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கு குன்றதோறாடும் குமரன் கோயில்கொண்டெழுந்தளியிருயுள்ளான். கலியுக வரதனாகிய கந்தன் கழலிணையின் பெருமையை அறியாதார் யார்? யாழ்ப்பாணத்துத் தமிழன்பர், **திரு. சின்னையா அவர்கள்** சுவைமிகு தீந்தமிழில் கதிர்காமத்தில் உறையும் வடிவேற் பெருமானுக்குப் பாமாலை புனைந்துள்ளார். பாமாலையில்,

" காடு சூழ்கதிர் காமத்திற் காவடி
ஆடு வோர்களும் ஆடி அவன்புகழ்
பாடு வோர்களும் பாடி அவன்கழல்
சூடு வோர்களும் எண்ணில் தொகையரே "

என்னும் இதுபோன்ற பல சுவைமிகு தமிழ்ப் பாடல்கள் நிறைந்திருக்கின்றன."

முகவுரை

1. எமது கண்களுக்குப் புலப்பட்டுத் தோற்றும் சூரிய மண்டலமும், இந்தச் சூரியமண்டலத்தின் ஆகர்ஷணசக்திக்கு உட்பட்டுத் தன்னிடத்தே வாழுகின்ற சீவராசிகளுக்குத் தேவைப்படும் அளவு உஷ்ணம் வரக்கூடிய வேகத்தில் தன்னைத்தான் சுற்றிக்கொண்டும் சூரியனிலிருந்து தமக்குள்ள இடைவெளித் தூரத்தின் வித்தியாசத்துக்கு அமைவான காலஅளவில் சூரியனைச் சுற்றிக்கொண்டும் ஒரு மண்டலத்திலிருந்து மற்றை மண்டலங்களுக்கும், சூரியனுக்கும் இருக்கவேண்டிய தூரத்தின் நியதியில் தவறுபடாமலுமிருக்கின்ற பூமி முதலான மண்டலங்களும் ஒரு கணத்துக்கு அனேக ஆயிரம் மைல் தூரம் பரந்த வானவெளியில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

2. இதேபோன்று பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது சூரியர்களும் அந்தச் சூரியர்களுடைய ஆகர்ஷணசக்திக்குட்பட்ட மண்டலங்களும் ஒவ்வொரு சூரியர்களோடும் தனித்தனி மேலே குறிப்பிட்டபடி ஓடிக்கொண்டிருக்கின்றன.

3. இப்படியே அனேக மண்டலங்களை இழுத்துக்கொண்டு ஒருகணத்துக்கு அனேக ஆயிரம் மைல் விகிதமாக வானவெளியில் ஓடித்திரிகின்ற பன்னீராயிரஞ் சூரியர்களும், பன்னீராயிரஞ் சூரியர்களோடு தனித்தனி சேர்ந்தோடுகின்ற அனேக ஆயிரம் மண்டலங்களும் ஒரு சூரியனுக்குச் சமீபமாக மற்றைச் சூரியன் அல்லது மற்றைச் சூரியர்கள் அல்லது ஒரு சூரியகுடும்பத்தைச் சேர்ந்த மண்டலம் அல்லது மண்டலங்கள் அணுகி வருவதில்லை.

4. மேலே கூறியபடி பன்னீராயிரம் சூரியர்களுடைய ஒளியையும், உஷ்ணத்தையும் மூலாதாரமாகப்பெற்று அனேக ஆயிரம் மண்டலங்களிலும் உயிர்வாழுகின்ற பலதிறப்பட்ட உடலமைப்பைக்கொண்ட சீவராசிகளுக்கும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் ஐந்தொழில்களையும் செய்தருளுகின்ற இறைவன் ஒருவனே.

5. சூரியனை ஒரு உதைபந்தின் அளவாக வைத்தால் ஒரு கடலைவிதைப் பிரமாணமாக வைத்தெண்ணப்படக்கூடிய பூமண்ட

லத்தில் எண்பத்துநாலில் ஒன்பதுபங்கு யோனிபேதங்களைக் கொண்ட மனிதர்கள் ஏறக்குறைய இருநூற்றைம்பது கோடியானால் தேவர்களை நீக்கி எண்பத்துநாலில் அறுபத்தொன்று விகிதமான (மனிதர்களொழிந்த) மற்றை ஐவகைப் பிறப்புக்களிலும் ஏறக்குறைய ஆயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றைந்துகோடி சீவராசிகள் இருக்கவேண்டும்.

6. இந்தச் சிறிய அளவையுடைய பூமியில் மாத்திரம் இருக்கக்கூடிய சீவராசிகளின் தொகை இவ்வளவாகில் மற்றைச் செவ்வாய் முதலான மண்டலங்களிலும் சூரிய மண்டலத்திலும் எத்தனை கோடி சீவராசிகள் உயிர்வாழும்.

7. ஒரு சூரியமண்டலத்திலும் அந்தச் சூரியமண்டலத்தைச் சார்ந்துள்ள பூமி முதலான மண்டலங்களிலும் கணக்கிலடங்காத சீவராசிகள் இருந்தால் மற்றைப் பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது சூரியமண்டலங்களிலும் அவைகளைச் சார்ந்த அனேக ஆயிரம் மண்டலங்களிலும் எத்தனைகோடி சீவராசிகள் இருக்கக்கூடும்.

8. உத்தேசித்துத்தானும் உணரமுடியாத அனேக ஆயிரங் கோடி சீவராசிகளில் ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்டுள்ள நியதிப்படி சுகம், துக்கம், ஆயுள், செய்தொழில் என்கின்ற ஒவ்வொன்றிலும் அணுவளவும் பிழையின்றி நிகழச்செய்துகொண்டிருக்கின்றவரும், நாற்பத்துமூன்று இலக்ஷத்திருபதினாயிரம் வருஷங்களைக்கொண்ட சதுர்யுகங்கள் இரண்டாயிரங்களை ஒருதினமாகவும், இந்தத் தினங்கள் முந்நூற்றறுபது கொண்ட வருடங்கள், நூற்றை ஆயுள் முடிபாகவுங்கொண்ட பிரமாக்கள் அனேகருடைய கபாலங்களை மாலையாகக் கோர்வைசெய்து அணிந்திருப்பவருமாகிய இறைவனுடைய பெருமையையும், இந்தப் பெருமையை நோக்கும்போது "நீரில் எழுத்தையும்" எமது ஆயுளுக்கு உபமானம் சொல்லமுடியாத எங்களுடைய சிறுமையையும், அத்தனைப் பெரிய இறைவன் இத்துணைச் சிறிய எங்கள் பொருட்டுச் செய்தருளும் பஞ்சகிருத்தியங்களையும் ஊன்றிச் சிந்திக்குமெவனும் உள்ளமும், உடலுமுருகி இறைமயமாகக்கூடும்.

9. இத்தன்மை வாய்ந்த இறைவனுடைய முற்றுணர்வு, சர்வவல்லமை, சர்வவியாபகம் ஆதியான குணங்களையும், அந்தக்

குணங்களுக்குரிய பண்பாடுகளையும் உணராத மதபோதகர்கள் சிலர் கற்றறிவற்ற பாமரப் பொதுமக்களிடத்தே பல கடவுளர்கள் உண்டென்ற பனப்பான்மையை ஏற்படுத்திவிடுகின்றார்கள்.

10. அப்படிப் பல கடவுளர்கள் உண்டானுல், அந்தப் பல கடவுளர்களும் தம்முள் இரண்டாகப் பிரிந்து, அகோரமான ஆயுதங்களையும் உற்பத்திசெய்து, பிரமாண்டமான யுத்தமொன்று செய்து முடித்திருப்பார்கள்.

11. யுத்த முடிவில் தோற்றகக்ஷிக் கடவுளர்களைச் சிறைப் பிடித்து வென்றகக்ஷிக் கடவுளர்களின் தலைவர் முழுமுதற் கடவுட் பதவியைப் பெற்றிருப்பர். அப்படி நடந்த சரித்திர நூலுமில்லை, கர்ணபரம்பரைக் கதையுமில்லை.

12. இந்தப் பன்னீராயிரஞ் சூரியமண்டலங்களையும் அவற்றோடு தனித்தனி சேர்ந்தோடுகின்ற மண்டலங்களையும் எந்தச் சூரியனுடைய கவர்ச்சிக்கும் உட்படாத இடத்தில் ஒருவன் நின்று அணுகரிசனிமூலம் பார்க்கக்கூடுமானுல் ஈஸ்பரனுடைய சர்வ வல்லமையின் திறமையைப் பிரத்தியக்ஷமாக அறிந்துவிடலாம்.

13. இந்த நிகழ்ச்சிகளைக்கொண்ட சிருட்டி தத்துவத்துக்கு இன்றியமையாததறிந்திருக்கவேண்டிய வேதங்களனைத்துக்கும் மூலமான பிரணவத்தின் சூக்குமார்த்தத்தை உணராதிருந்தமையால் பிரமதேவரைத் தடுத்துத் தாமே சிருட்டித்தொழிலை நடத்திய கந்தக் கடவுளின் பரத்துவ நிலை கணிக்குந்தரமன்று.

"எல்லா வுலகமு மானுய் நீயே" (தேவாரம்)
"தலைமாலை தலைக்க ணிந்து" (தேவாரம்)

கச்சாய்,
1-6-55.

சி. சின்னையா.

நன்றியுரை

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலயத் தலைமையாசிரியர், திரு. ச. அம்பிகைபாகன், வெள்ளவத்தை, சைவ மங்கையர்கழக வித்தியாலயச் சைவாசிரியைமார், கெலிஓயா அரசினர் தமிழ்வித்தியா சாலை ஆசிரியர், திரு. க. சிங்காரவேலு, பாலபண்டிதர், பாணந்துறை அரசினர் தமிழ் வித்தியாசாலையின் சைவ ஆசிரியர்கள், பண்டாரவளை செண் யோன்ஸ் கல்லூரி ஆசிரியர், திரு. ஆ. செல்லையா, உசன் சைவ வித்தியா சாலைத் தலைமை ஆசிரியர், திரு. மு. சிற்றம்பலம், சாவகச்சேரி, இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர், திரு. ஆ. மண்டலேசுபரன், உதவி ஆசிரியர், திரு. செ. மாணிக்க வாசகர், சங்கத்தானை, தமிழ் சைவ வித்தியாசாலையின் ஆசிரிய ஆசிரியைமார், கொடிகாமம் சைவத் தமிழ் வித்தியாசாலையின் ஆசிரியர்கள், கொக்குவில் இந்துக்கல்லூரியின் உதவி ஆசிரியர், திரு. க. மயில்வாகனம், நாவலப்பிட்டி "ஆத்மஜோதி" மாதஇதழின் பதிப்பாசிரியர், திரு. நா. முத்தையா, கோப்பாய், அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலைத் தலைமை ஆசிரியை ஆகிய இவர்களுடைய தாராள மனப்பான்மைக்கு எனது நன்றிகலந்த வணக்கம். ஞாபகசக்தி தடுக்கப்படாவிடில் அடுத்த ஜெனனத்திலும் இவர்களுக்கு நன்றிகூறக் கடமையுடையேன்.

சி. சி.

பன்னிருசீ ராசிரிய விருத்தம்

1. பாராளு மன்றத்தி னங்கத் துவம்பெற்ற
பலருமந் திரிமார்களும்
பதவியி னுயர்ந்தநிலை பெற்றபெரி யோர்களும்
பண்பா டுயர்ந்தபேருஞ்
சீரான கல்வியி னிலக்கண விலக்கியத்
தெளிவுபெற் றிடுமறிஞருந்
திசைநோக்கி யனைவருங் கும்பிடுங் கற்புடைய
தெரிவைமார் களுமுலகமும்
பாராதி பூதங்கள் திரிபெய்து முடலமும்
பற்றிடும் பற்றிகந்து
பகிர்முக மிகந்துபிங் கலையிடை தவிர்ந்துபண்
படுசுழு முனைக்கணின்று
வாராத செல்வங்கள் வந்துறப் பெறுமவரு
மாசீர் வதித்துமென்ன
மனமாசை முதலான பண்புறிற் கதிரைமலை
வருசார லுறைதெய்வமே.

2. ஆரா ரிருந்தென்ன பொன்மலையை யொத்ததன
மவைகளு மிருந்துமென்ன
அரசரு மமைச்சருஞ் சேனாதி பதியுமுற
வாயிருந் தாலுமென்ன
வீராதி வீரனிவ னென்றுபூ மண்டல
மிகப்புகழ்ந் தாலுமென்ன
வெண்பா விருத்தங் கலித்துறைக ளாங்கவி
விதங்களைப் பாடியென்ன
ஓரா யிரங்கோயில் கும்பிட்டு மென்னபல
னுயிர்கட் கிரங்காவிடி
னுயிர்தோறு மடியினிற் பால்போ லுறைந்தெங்கு
முற்றிருந் தருளுமீசன்
சீரா ரடிக்கருணை மழைமிகப் பொழிகுவன்
செகமுற்று மிகவசியமாந்
தென்கதிரை மலைவந்த கந்தனே யுயிர்களிற்
றீங்கருணை யுடையபேர்க்கே.

3. உடல்வள முறத்தினந் தினமுண் டுறங்கிமற்
றுடல்கலந் துளபொருளெலாம்
ஒன்றும் பிறர்க்குரிமை யன்றென்று வல்வழக்
குரைபகர்ந் துலகினிருநீர்க்
கடலினுங் ககனநெறி யதனிலும் பெறவுரிமை
கருதியே கனவுகண்டு
கற்பனைகள் செய்துவாழ் வற்பமும் போக்கியே
காலமவை வீணில்விட்டு
நடைமெலிந் துயர்விழிக ளொளிகுன்றி நரைவந்து
நாதமும் பிரிவின்றியே
நாவுருசி யறிவின்றி யேதினும் பற்றின்றி
நமர்களும் பற்றின்றியே
நிடமழிந் துறுதினங் கலைநிறைந் துறுநிலவு
திகழுறு முகங்கள்பொலியத்
தேவாரு குறமாத ரீர்புடை யுறத்தோகை
மேல்வருக கதிரேசனே.

4. ஐந்தொன்ப தாமதிபர் சுபராகி யுச்சமா
யாட்சியா யன்றிநட்பா
யாறெட் டுடன்வியத் தானமா திபருறவை
யற்பமும் பெற்றிடாமல்
வந்தபத் தேழுநா லென்றகேந் திரமுற்று
வருதிசை நடத்துநாளின்
வளர்மன மகிழ்ச்சியும் பொருள்வரு நிகழ்ச்சியும்
வாய்த்துமிக வாக்கமுறுபோ
தெந்தைநின் பாதார விந்தத்தி னுறுபத்தி
யெட்டுணையு மேனுமருகா
தியல்வகை யெமக்கருளு வாய்கரு மயிற்குல
மிரும்பொழி லிடங்கள் பயிலக்
கந்தர மிருண்டொலித் தொளிகான்று மழைபொழி
கருங்கல் லகச்சாரல்சேர்
கதிரையம் பதியில்வளர் கானவர்கள் சுந்தரி
கருத்தமைந் துறைகடவுளே.

5. அக்கரமொ ரைந்தினில் வகாரநெடி லாயுச்
சரித்திடுந் தன்மையூல
ஆதார நின்றமே லேகிவரு மாதார
மைந்தினுக் கிடைவெளியொரைந்
திக்குறி யிரண்டெட்டு மற்றிரண் டேபத்த
திறுதிபன் னிருவிரலதாம்

இந்தவெளி நீட்சியை நிரப்புதற் கேநீண்
டிருப்பது வகாரமாகுந்
தக்கவர்க் ளுணருவா ராதார மூலந்
தனிற்பிரண வம்பின்"ந"கரந்
தகுமகர சிகரவக ரங்களின் பின்னுறுந்
தகைமையே "ய"கரமாகும்
முக்கண னருட்பெறுங் குடமுனி வனுக்கீது
முன்னுரைத் தருளுமாறு
முகவனே கதிரையம் பதியில்வரு மடியார்கள்
மோகம தகற்றுகுருவே.

6. கல்விபல கடலவற் றின்றுறை யனேகங்கள்
கற்பவ ரிலக்குமாறிக்
கடவுளிலை மறுபிறப் பிலைகன்ம வகையில்லை
காரணம தானதுயரும்
நல்விழுமி தாயசுக மில்லையெனு நாத்திகம்
நவில்துறைகள் சென்றிடாமல்
நற்றுறை யடைந்துனருள் பெற்றிடும் பேறுபெற
நாயினேற் கருள்புரிகுவாய்
கொல்விட மடங்கரவு வலிகுன்ற நடமிடுங்
குலமயிற் புறமெயினர்தங்
கோமகள் வலம்பெறக் குஞ்சரி யிடம்பெறக்
கூரயில் கரத்தினிலக
வெல்விரு துறுங்குக் குடக்கொடி பறக்கமலர்
வீசியடி யார்கள்தொழவே
வேண்டிய வரந்தந்து தென்கதிரை வளராறு
விரிசுடர் முகக்கடவுளே.

பதினான்குச் ராசிரிய விருத்தம்

7. தோலா னரம்பு வகையா லெலும்பு
கறையா லியன்ற வுடலின்
சுமைவீழ் பிறப்பி னியல்பாவ புண்ய
தொகைசே ரருத்தி யளவின்
பாலா யியங்கு மெனயோக நின்ற
பருமா முனித்தொ குதியும்
பகரா மங்கண் முதலா யமைந்த
பதிசாத் திரங்க ளெனுநன்
னூலோது முண்மை யவையா லறிந்து
நுவல்வீடு பின்பு பெறவே

நோலா திருக்கு மறிவின ன்ன
சிறியேனை யாள வருவாய்
காலா லுதைந்து நமனுரை முன்பு
மறையோனை யாண்ட கடவுள்
கட்டி பிறந்த கதிரேச தெய்வ
கணமார மஞ்ஞை மிசையே.

பன்னிருசீ ராசிரிய விருத்தம்

8. செந்தமிழி லெழுநூறு கவிகம்ப னித்தமுஞ்
செப்பின னென்றுசரிதந்
தீட்டிவைத் தார்கண னேழுகவி யாயினுஞ்
செப்பிடத் திறமையில்லேன்
எந்தனைக் கவிபாட வல்லவ னெனக்கூறி
னிதுசிரிப் பாகுமுலகில்
இன்னுமெத் தனைபுலவர் பாடினர் பொருளாழ
மினியசொற் சந்தமுறவே
கந்தனைக் கதிரையிற் சென்றுவழி பட்டருட்
காட்சிபெற வெண்ணியடியார்
கால்நடையில் யாத்திரைசெய் காலைவழி யோதுங்
கருத்துறப் பாடும்பிர
பந்தமென நாமம் பகர்ந்திடுஞ் சிலகவிகள்
பாடினேன் பிழைகளுண்டேல்
பால்சேர்ந்த நீரெனப் புலவர்பண் டிதரறிஞர்
பார்த்துளங் கொள்வார்களே.

9. நான்பாடு மிவையென்ன தேவார மோவன்றி
நல்லதிரு வாசகமதோ
நானிலம் புகழ்தாயு மானவன் கவிகளோ
நகரடிகள் செய்யுள்தானே
என்பாடி னுயென்று கேட்பாரு மிலைபடித்
தின்புறும் பேருமில்லை
யின்பத் திருச்செந் தமிழ்க்கவி களுக்குலக
மிப்படி மதிப்பிடுவதேன்
கான்பாடி யினியசெந் தேனுண்டு மலர்மீது
கண்வளர வண்டினங்கள்
கவியினஞ் சஞ்சரித் தேதுயி லெழுப்பிக்
கலைத்திடுஞ் சோலைசூழ்ந்த
வான்பாடி யுறைதேவர் மகள்வா ழிடங்கொண்ட
வள்ளலே கதிரைமுருகா
மற்றிரண் டாசையற் றுலென் கவிக்குவிலை
வையகம் வழங்குநிசமே.

எண்சீ ராசிரிய விருத்தம்

10. பொய்யறியேன் பெரியோரைத் தவம்புரிந்து பெற்றுப்
பிரியமுடன் வளர்த்தெடுத்துப் போற்றுமருந் தாயை
வையுமவை செய்தறியேன் சதிபுரியே னன்றோர்
வகுத்தபல சுருதிகளைப் படித்துமனத் தகத்தே
பெய்திடுவே னுபகாரம் பிறர்விரும்பப் புரிவேன்
பேணியெனை வந்தடைந்தோர் பிரியமுற வேதுஞ்
செய்திடுவே னுலகிலினிச் செய்வதெவன் வேறு
தென்கதிரைப் பதியுறையுந் தேவசிகா மணியே.

11. கொலைபுரியேன் கொன்றபுலால் தின்றிடவு மறியேன்
கூடாத களவுமனங் குறித்துமிக வறியேன்
விலைபெறுவார் மனையிருக்குந் திசையினையு மறியேன்
வெற்றிபெறு நோக்கினருங் குற்றமிழைத் தறியேன்
கலையறியா மூடரொடு கூடிநடந் தறியேன்
கல்விபுகட் டியகுருவை நிந்தனைசெய் தறியேன்
சிலையினிருஞ் சாரல்வரு தென்கதிரைப் பதிசேர்
தேன்பொழியும் பூம்பொழில்சூழ் சினகரத்து நிதியே.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

12. மணங்குணம் வடிவம் நிறம்பல பல்வாம்
மலர்களு மிலைகளும் மலிந்த
அணங்கில்பன் மரங்கள் செடிகொடி யனைத்து
மத்திறம் விலங்குபுள் ளவையும்
இணங்குநன் னீர்வாழ் வனவுட னூரு
மிவையெலாம் பலதிற மிருப்பக்
குணம்பெறு மனிதர் குலமதொன் றென்பார்
கொடுத்தருள் கதிரைவாழ் குகனே.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

13. கண்ணாற்கண் டறிந்துசெவி கேட்டறியு
மவையெல்லாங் கடவுட் கோலம்
மண்ணீர்தீ வளிவெளிக ளுயிர்மதியஞ்
சுடரான வகையோ ரெட்டும்
பெண்ணோர்பங் கினனொளிரு முருவென்றே
மறைபேசும் பெற்றி காணின்
எண்ணார்மற் றெவர்களுக்குந் தீமைசெயத்
தென்கதிரை யிலங்குந் தேவே.

14. முதிரையுங் கனியுந் தேனும் மூலமுஞ் சுனையி னீரும்
மதுரமென் மொழியாள் கான வள்ளியும் பெறுதல் வாய்ப்பத்
துதிபெறு மயில்மேற் கொண்டுஞ் சூரடுமயில் கைக்கொண்டுங்
கதிரையில் முருகன் முன்னாட் காதலித் தமர்ந்தா னன்றே.

15. மலைபொடி படுத்துச் சூரன் வச்சிர மார்பு கீண்ட
இலைவடி வான வேலா லென்வினை பொடித்து மாற்றார்
கிலைகெடுத் துயர்ந்த வாழ்வு நீயெனக் கருள்வாய் தென்பாற்
சிலைவளர் கதிரை மேவுஞ் செல்வமே தேவே போற்றி.

கட்டளைக்கலித்துறை

16. அணிவர் கழுத்திலுங் காதிலு மூக்கிலு மங்கையிலும்
பணியெனப் பேர்சொல்வர் முற்றும்பொன் னனபருப்பொருளே
மணிமயி லூர்கதி ரேசா புனலெரி வானுயிர்மால்
திணிநில மென்மதி யென்றிறை நிற்குந் திறமென்னவே.

17. உட்பகை யாறி னுலோபமொன் றென்ப துணர்ந்துயர்ந்தோர்
கட்பொரு ட்கோடி பெறுமென ஞால நவிற்றுமவர்
பட்புயர் வாகும் மயினட மாடப் படத்தரவு
முட்புத ரோடி யொளிக்கும் கதிரையின் முன்னவனே.

18. தேசா ருடற்படு மான்ம விருத்திகள் தேயுமென்றே
பேசா ருயிர்த்திற னூல்கற்ற மாந்தர்கள் பேயரென்றே
கூசாமற் கூறுவர் கல்லாத மூடர்கள் குஞ்சரங்கள்
ஊசாடு மாமலைச் சாரற் கதிரை யுகந்தவனே.

19. கட்டுக் கடங்கிநில் லாத சரங்கினைக் கட்டிவைத்துக்
கெட்டிப் படுத்திச் சுடச்செய நீர்த்துணை கிட்டுதல்போல்
எட்டுத் திசையினு மோடித் திரிபு மிரும்புலனைக்
கட்டக் கதிரைக் குமரா துணைநின் கழலிணையே.

20. மேகத்தை வாதமென் பார்சுட்ட காங்கை மிகுமருந்தை
வேகக் கொடுப்பர் மிகுதல்கண் டின்றும் மிகக்கடினம்
ஆகப் புரிந்தெவ ராலுந் தடுக்க வருமைசெய்து
சாகச்செய் வார்கதி ரேசா வைத்தியர் தாஞ்சிலரே.

கட்டளைக்கலித்துறை

21. நுள்ளிச் செவிக ளிரண்டினும் வைதுகை கோகடித்துப்
பள்ளியிற் சட்டம்பி யார்செய்த துன்பம் பலவும்பட்டேன்
கள்ள மிலாமற் கலைப்யின் றேன்கவி பாடக்கற்றேன்
அள்ளிக் கொடுப்போ ரருமை கதிரையி லானந்தனே.

22. பட்டாடை வாங்கப் படம்பார்க்க நிழ்மது பானம்பண்ண
முட்டாளுங் கிந்திடப் பொய்வழக் காட முடிவுசெய்யுங்
கட்டாரி சேர்விலை மாதர்க் களித்திடக் காசுண்டுபூ
மட்டார் கதிரையைப் பாடுங் கவிக்கில்லை வையகத்தே.

23. செல்வம் பெருங்கல்வி பெற்றவ னென்பர் தெரிந்தவன்தன்
செல்வம் பிறர்க்குப காரஞ்செய் வானன்றிச் சேமித்திடான்
கல்வந்த நெஞ்சின ருண்டகை வீசிலர் காக்கைக்கவர்
செல்வஞ் சிறையி லிருக்குங் கதிரையிற் செல்வரிங்கே.

வெண்பா

24. இங்குண்டங் கில்லையங் குண் டிங்கில்லை யென் றுமுரை
தங்கண்கொண் டெல்லீருங் காணுணர்க—இங்குண்
டுடுத்துமகிழ் வோர்கதிரை யீசா வுறுவார்
அடுத்துத் துயரமவை யாம்.

25. மண்வெட்டி வாள்கத்தி வாச்சியுளி பேனை
பண்பட்ட பல்லுருவிற் பஃறொழிலுக்—கெண்பட்
டமையுமொன் றுலொன் றமையா வெவையுஞ்
சமையுமிரும் பாற்கதி ரேசா.

26. கண்ணிருந்துங் காணார்கள் கேளார்கள் காதிருந்தும்
எண்ணமனந் தானிருந்து மெண்ணாரே-மண்ணிருந்துங்
கோடிநிதிய மிருந்துங் கொடார் கதிரை
ஆடுமயி லேறுமுரு கா.

27. ஈத லறமென் றியம்பும் மறையுரையை
யோதி யதனுள் ளுறைதெரிந்து—நீதி
வழங்குவார் மக்கள்பிறர் மாக்கள் கதிரை
யிளங்குமரா நீபடைத்தா யேன்.

28. மாக்கள்போற் றீய குணமுடையார் வாலில்லை
மீக்கொண் மருப்பில்லை வேறில்லை—ஆக்கினுய்
வேத னறியான் படைப்பென்று வெஃகிநீ
யேதுகதி ரேசா விவை.

29. ஐயறிவும் மேலொன் றறிவும் பெறுமனிதர்
செய்வர் விலங்கினங்கள் செய்யாத—பொய்யுங்
களவுநய வஞ்சகமு மற்றுங் கதிரைக்
குழகவீ தென்ன குணம்.

30. முன்னம் படர்க்கையிலு முள்ளிலையி லும்பின்பு
தன்மையிலு மீசன் றனையுணர்வார்—முன்னந்
துவிதமாய்த் தென்கதிரைத் தூயோய்பின் சுத்தத்
துவிதமாய் நல்குஞ் சுகம்.

கட்டளைக்கலித்துறை

31. ஆறுதி பதினட்ட மாதிபன் பன்னிரண் டாமதிபன்
வேறாய்த் திசைபுத்தி சித்திர மாற்றுமவ் வேளைவரும்
பேறேயு மார்த்தி யுறுபோதென் றீவினை பின்னடைந்து
தீரகத் தென்கதி ரேசா குறிக்கவுன் னேத்திரமே.

வெண்பா

32. கந்தன் குகன்முருகன் கண்ணுதல்சேய் பார்ப்பதிக்கு
மைந்தன் கதிரை மலைக் கிறையை—வந்து
தொழுவா ருடற்பிணிபோஞ் சுற்றிவல மாகி
விழுவா ருயிர்ப்பிணிபோ மே.

33. ஆக்கு மலர்மே லயனு மரவணையிற்
காக்கு நெடுமாலுங் காணாத—பூங்கொண் முடி
நீளடியான் பெற்றோ னெடுங்கதிரை நின்றிலகுந்
தாளடியேம் பெற்ற தனம்.

34. சீராருந் தென்கதிரைச் செல்வன் றிருவடிகள்
ஓரா பிரமனுக்க ளுச்சரித்தே—யாராத
அன்பின் மலரிட் டருச்சனைகள் செய்வார்தந்
துன்பம்போம் நிற்குஞ் சுகம்.

35. ஆடுவா ராற்றி னணிவார் பொடிகுளத்திற்
சூடுவார் கைதலைமேற் சுற்றுவார்—பாடி
அழுவார் கதிரைநக ராலயத்தி லன்பர்
தொழுவார் விடுவார் துயர்.

36. ஆரு மலையனைத்து மங்கையமைத் தன்பூறும்
ஈர மனத்தடியார்க் கீயவே—கூரிலைவேல்
ஐயன் கதிரை யமர்ந்தா னறிவுடையோர்
உய்ய விரைவீ ருவந்து.

37. கொச்சைத் தமிழ்பாடிக் கூப்பிட்டா லுங்குமரன்
இச்சைக் குமரியுட னெய்துவான்—பச்சைமயில்
ஏறிக் கதிரை யிலங்கா லயத்தடியார்
கூறத் துதியமரர் கோன்.

38. சின்னஞ் சிறியநாங் தேவர்களும் தேருத
பென்னம் பெரிய பிரானுன்னை—என்னினைந்து
பாடுவேங் தென்கதிரைப் பண்ணவா பொன்னடிமேற்
போடுவேங் தேனுமிழ்பைம் பூ.

சுபம்!

சாவகச்சேரி, இலங்காபிமானி அச்சியந்திரசாலை

சாவகச்சேரி,
இலங்காபிமானி அச்சியந்திரசாலை